# காத்திருக்கும் பரிசுகள்!

வாசிக்க: எபிரேயர் 12

***"நல்ல போராட்டத்தைப் போராடினேன்; என் ஓட்டத்தை முடித்துவிட்டேன்; விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்; இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது வெற்றிவாகையே!" (2 தீமோ 4:7,8)***

கிறிஸ்தவ வாழ்க்கை ஓர் ஓட்டம் போன்றது. இந்த ஓட்டத்தில் எத்தனை மேடுகள், பள்ளங்கள், முட்கள், காயங்கள், துன்பங்கள், அவமானங்கள்! ஆனால் இவை அனைத்திற்கும் முடிவாக நாம் பரிசுகளைப் பெறுவோம் என்பது எவ்வளவு பெரிய ஊக்கம்! அப்பரிசுகளை எபிரேயர் 12ஆம் அத்தியாயம் விளக்கிக் கூறுகிறது.

**1.** நாம் அக்கரை சேரும்போது, அங்கே நமது விசுவாசத்தை முடிக்கிறவராகிய இயேசு கிறிஸ்துவை, தேவ ஆட்டுக்குட்டியை, முகமுகமாய்க் காண்போம் (வச 2). நமது ஓட்டத்தைத் துவக்கிய அவர் இப்போது நம்மை வரவேற்க விரித்த கரங்களுடன் அங்கே காத்திருப்பார்.

**2.** நமது தலைவருடைய மகிழ்வுக்குள் நாம் நுழைவோம் (வச 2). ஓட்டத்தின் முடிவு நித்திய மகிழ்ச்சி. இனி கண்ணீரில்லை, கவலையில்லை, மரணமில்லை. மகிழ்ச்சி, மகிழ்ச்சி, என்றுமே மகிழ்ச்சி!

**3.** கடவுளின் அரியணையின் வலது பக்கத்தில் இயேசு வீற்றிருக்கிறார் (வச 2). அப்படியே நாமும் அவரது அரியணையில் அமர்ந்திருப்போம் (வெளி 3:21). நமது நித்தியப் பணி ஆராதனையாகவே இருக்கும். ஜெபமில்லை, பிரசங்கமில்லை, தொழுகை மட்டுமே அங்குண்டு!

**4.** புனிதமாகுதல் நமக்குப் பூரணமாகும். தேவனது தூய்மையில் முழுமையாய்ப் பங்கு பெறுவோம் (வச 10). கிறிஸ்துவைப் போலவே மறுரூபமாவோம். பாவத்தின் பிரசன்னத்திலிருந்தே மீட்கப்பட்டுவிடுவோம்.

**5.** காணக்கூடாத கடவுளைக் கண்ணாரக் கண்டு களிப்போம் (வச 14). யாரும் சேரமுடியாத ஒளியில் இருக்கிறவர் நம்மோடு தங்கியிருப்பார். நாம் அவரது மக்களாயிருப்போம். அவர் நமது கடவுளாயிருப்பார் (வெளி 21:3).

**6.** ஆசீர்வாதங்களிலேயே "ஆசீர்வாதமான" கடவுளின் பிள்ளைகளின் பிறப்புரிமையை முழுமையாய் அனுபவிப்போம் (வச 16,17). "கடவுள் தம்மில் அன்பு செய்பவர்களுக்கு ஆயத்தம் செய்தவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனிதனுடைய எண்ணத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ கடவுள் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்" (1 கொரி 2:9,10). இன்று வெளிப்படுத்தப்பட்டவைகள் நாளை நமது அனுபவமாகும்.

**7.** இறுதியாக, அசையாத இறையரசில் குருக்களும், அரசர்களுமாய் என்றென்றும் கடவுளைச் சேவிப்போம் (வச 28).

*நேயமுற்பிதாக்கள், தீர்க்கர், நிர்மலன் அப்போஸ்தலர்கள்,*
*நீதிமான்கள், எல்லவரும் தூதர் நல்லோரும்*
*ஒய்வதின்றித் தோத்ர கீத உச்சிதத் தொனிமுழக்கி*
*உன்னதனைப் போற்றுவார்கள்; பன்னரும் சிறப்பதுள்ள*
*வான நகரதின் மேன்மையென சொலுவோம்,*
*கன வலன் நலவருக்கருள்! (கீர்த்தனை)*

*— ஞா. சாமுவேல் ஐயர், தரங்கம்பாடி*